# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2248/64 - 2021 ඔක්තෝබර් මස 08 වැනි සිකුරාදා - 2021.10.08

*2248/64 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

கட்டளை இல. 79

**2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

20(5) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 20(5) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, 2019, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 2155/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 57 ஆம் இலக்க கட்டளை மற்றும் 2021, யூலை மாதம் 25 ஆந் திகதிய 2237/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 74 ஆம் இலக்கக் கட்டளையை இக்கட்டளையின் மூலம் இரத்துச் செய்வதுடன் 2016, யூலை மாதம் 14 ஆந் திகதிய 1975/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 39 ஆம் இலக்க கட்டளையில் "கோதுமை மாவு" எனும் வகையினையும் இக்கட்டளையின் மூலம் நீக்குகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

மேஜர் ஜெனரல் **சாந்த திசாநாயக்க** (ஓய்வுபெற்ற),
தவிசாளர்.

கொழும்பு,
2021, ஒற்றோபர் 08.